GoLAAH TRAVELS
9490547783 கார் வாங்க/ விற்க வேண்டுமா? இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
8870884969 எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
9597887847 / 8870884969

# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், அக்டோபர் 19.2021 மலர்:10 இதழ்:14

# பள்ளிக்கல்வித்துறை சார்பில் "இல்லம் தேடி கல்வி"என்ற புதிய திட்டம் விழிப்புணர்வு வாகனங்களை அமைச்சர் அன்பில் மகேஷ் தொடங்கி வைத்தார்

## வருமானத்துக்கு அதிகமாக ரூ.27 கோடி சொத்து;விஜயபாஸ்கருக்கு சொந்தமான இடங்களில் அதிரடி சோதனை







அதிமுக ஆட்சியில் வருமானத்துக்கு அதிகமாக அமைச்சர்கள் சொத்துக்களை சேர்த்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து அதிமுக முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் சோதனை நடத்தி வருகிறார்கள். முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.விஜயபாஸ்கர், எஸ்.பி.வேலுமணி, கே.சி.வீரமணி ஆகியோரது வீடுகளில் ஏற்கனவே சோதனை நடத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அதிமுக ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளாக சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த சி. விஜயபாஸ்கர் வீட்டில் இன்று லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தி வருகிறார்கள்.சென்னையில் கீழ்ப்பாக்கம், சேத்துப்பட்டு ஆகிய 2 இடங்களில் உள்ள அவரது வீட்டில் சோதனை நடத்தப்பட்டது. கீழ்ப்பாக்கம் டெய்லர்ஸ் ரோடு, சேத்துப்பட்டு ஹாரிங்டன்ரோடு ஆகிய 2 இடங்களில் அடுக்குமாடி குடியிருப்பில் விஜயபாஸ்கருக்கு சொந்தமான வீடுகள் உள்ளன.

இந்த 2 வீடுகளிலும் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினார்கள். டெய்லர்ஸ் ரோடு வீட்டில் நடைபெற்ற சோதனையின் போது வீட்டின் முன் அவரது ஆதரவாளர்கள் திரண்டனர். மேலும் முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, வேலுமணி மற்றும் நிர்வாகிகள் குவிந்தனர்.மேலும் நிர்வாகிகள் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷம் எழுப்பினர். செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கோவை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் விஜயபாஸ்கர் மற்றும் அவரது உதவியாளர்கள், உறவினர்கள் ஆகியோரது வீடுகளிலும் அதிரடி சோதனை நடைபெற்று வருகிறது.விஜயபாஸ்கரின் சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் ஆகும். அமைச்சராக இருந்த காலத்தில் அவர் தனது சொந்த மாவட்டமான புதுக்கோட்டை உள்பட பல இடங்களில் வருமானத்துக்கு அதிகமான சொத்துக்களை வாங்கி இருப்பது சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விஜயபாஸ்கரின் சகோதரர் நடத்தி வரும் மதர் தெரசா அறக்கட்டளை நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மதர் தெரசா பாலிடெக்னிக், கல்வி நிறுவனங்களிலும் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கோவை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய 6 மாவட்டங்களில் 43 இடங்களில் ஒரே நேரத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தி வருகிறார்கள். விஜயபாஸ்கரின் சொந்த ஊரான இலுப்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள 29 இடங்களில் சோதனை நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் கடந்த 2016 ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது தனது வேட்புமனு தாக்கல் பிரமாண பத்திரத்தில் தனது சொத்து மதிப்பு ரூ.6 கோடி 91 லட்சத்து 91 ஆயிரத்து 310 என்று தெரிவித்துள்ளார். ஆனால் தற்போது நடத்தப்பட்ட லஞ்ச ஒழிப்பு ஆய்வில் அவர் சொத்து பல மடங்கு அதிகரித்துள்ளது தெரிய வந்தது 1.4.2016 முதல் 31.3.2021 வரையில் அவரது சொத்து மதிப்பு பல மடங்கு அதிகரித்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.அந்த வகையில் விஜயபாஸ்கர் வருமானத்துக்கு அதிகமாக ரூ.27 கோடிக்கு சொத்துக்களை வாங்கி குவித்துள்ளதாக லஞ்ச ஒழிப்பு போலீசார் எப்.ஐ.ஆரில் குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பாக விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் விஜயபாஸ்கர் பெயர் முதலாவதாகவும், ரம்யாவின் பெயர் 2 வதாகவும் இடம் பெற்றுள்ளது. விஜயபாஸ்கர் அமைச்சராக இருந்த காலத்தில் தனது பெயரிலும், மனைவி, மகள்கள் பெயரிலும் அதிகளவில் சொத்துக்கள் வாங்கி இருப்பதாகவும் லஞ்ச ஒழிப்பு போலீசார் தெரிவித்துள்ளனர்.2011 மற்றும் 2016 ம் ஆண்டுகளில் விராலி மலை தொகுதியில் இருந்து எம். எல். ஏ. வாக தேர்ந்தெடுக்கப்பட்ட விஜயபாஸ்கர் சுகாதாரத்துறை அமைச்சராக பதவி ஏற்ற பிறகு ரூ.27 கோடிக்கு மேல் சொத்துக்களை வாங்கி இருப்பதாகவும் லஞ்ச ஒழிப்பு போலீசார் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.இதையடுத்து லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு சுட்டப்பிரிவின் கீழ் விஜயபாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மேலும் விஜயபாஸ்கர் 7 டிப்பர் லாரிகள், பி.எம்.டபிள்யூ கார் ஆகியவற்றை வாங்கி இருப்பதாகவும் முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிஎம்டபிள்யூ காரின் மதிப்பு ரூ.53 லட்சத்து 33 ஆயிரத்து 156 என குறிப்பிடப்பட்டுள்ளது.டிப்பர் லாரி உள்பட லாரிகளின் மதிப்பு ரூ.6 கோடியே 58 லட்சத்து 78 ஆயிரத்து 456 என தெரிவிக்கப்பட்டுள்ளது. 85.12 பவுன் தங்க நகைகளை விஜயபாஸ்கர் குடும்பத்தினர் வாங்கி இருப்பதாகவும் இதன் மதிப்பு ரூ.40 லட்சத்து 58 ஆயிரத்து 975 எனவும் தெரிவிக்கப்பட்டது.காஞ்சிபுரம் மாவட்டம் மொரப்பாக்கம் மற்றும் சில்லாவட்டம் பகுதிகளில் ரூ.3 கோடியே 99 லட்சத்து 5 ஆயிரத்து 400 மதிப்பில் விவசாய நிலங்கள் உள்ளதாகவும், சென்னையில் பகீரதி அம்மாள் தெருவில் உள்ள வீட்டின் மதிப்பு ரூ14 கோடியே 57 லட்சத்து 65 ஆயிரம் எனவும் குறிப்பிடப்பட்டு உள்ளது. தற்போது விஜயபாஸ்கரின் மொத்த சொத்து மதிப்பு ரூ.58 கோடியே 64 லட்சத்து 25 ஆயிரத்து 887 என்பது தெரிய வந்துள்ளது. புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் பீட்டர் அளித்த புகாரின் பேரில் துணை போலீஸ் சூப்பிரண்டு இமயவரம்பன் பதிவு செய்துள்ளார்.ராசி புளு மெட்டல்ஸ், கிரீன் லேண்ட் ஹைடெக் புரமோட்டர்ஸ், ஓம்ஸ்ரீவாரி ஸ்டோன்ஸ் நிறுவனம், ராசி என்ட்டர்பிரைசஸ், அனையா என்டர்பிரைசஸ், பி இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ், சாய் ஹரிதம் இன்ப்ரா பிரைவேட் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்கள் பெயரில் சொத்துகள் வாங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் தொடர்புடைய இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது. ஏற்கனவே 43 இடங்களில் சோதனை நடைபெற்று வரும் நிலையில் மேலும் 5 இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது

1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கற்றல் குறைபாடுகளைப் போக்க, இல்லம் தேடிக் கல்வி என்ற திட்டம் இன்று செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், அது குறித்து முதல்—அமைச்சர் மு. க. ஸ்டாலினுடன் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனையில், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா, ஆணையர் நந்தகுமார், அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிலையில், 1,8 ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கற்றல் குறைபாடைப் போக்க, அவர்களின் இல்லங்களுக்கே சென்று பாடம் நடத்தும் "இல்லம் தேடிக் கல்வி" திட்டத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் சென்னையில் துவக்கி வைத்தார்.

## முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில்



இந்த ஆண்டிற்கான ஐபிஎல் இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணியை வீழ்த்தி சென்னை அணி கோப்பையை வென்றதுஅடுத்த ஆண்டு ஐபிஎல் போட்டியில் புதிய வரவாக மேலும் இரண்டு அணிகள் வர உள்ளதால், தற்போது இருக்கும் அனைத்து அணி வீரர்களும் தொடர்ந்து அதே அணியில் விளையாடுவது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஒரு அணி மூன்று வீரர்களை மட்டுமே தக்கவைத்துக்கொள்ளலாம் என்று கூறப்படும் நிலையில், தோனி கண்டிப்பாக சென்னை அணியின் தக்கவைப்போர் லிஸ்டில் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, ஐபிஎல் வெற்றிகோப்பை சென்னை கொண்டுவரப்பட்ட நிலையில், சென்னை அணி நிர்வாகம் அதனை தி. நகரில் உள்ள திருப்பதி தேவஸ்தான கோவிலில் வைத்து வழிபட்டனர். அப்போது செய்தியாளர்களைச் சந்தித்த சென்னை அணி உரிமையாளர் சீனிவாசன் கூறியதாவது, "டி20 உலகக்கோப்பை முடிந்த பிறகு சென்னை வரும் தோனி, முதலமைச்சரை சந்தித்து வாழ்த்து பெற உள்ளார். ஐபிஎல் வெற்றியைக் கொண்டாடும் விதமாக சிதம்பரம் மைதானத்தில் வெற்றிவிழா நடைபெறும். இதில் ஐபிஎல் கோப்பையை முதல்வரிடம் தோனி கொடுக்க இருக்கிறார். தோனி இல்லாமல் சிஎஸ்கே இல்லை, சிஎஸ்கே இல்லாமல் தோனி இல்லை!" என்றார்.

அகர முதல
தொடர்புக்கு 9597887847 8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

YouTube சேனலில் பணிபுரிய ஆர்வமிருந்தால் அன்பர்கள் அணுகவும்.
(Editor, Content Writer & Speaker)
9597887847

# பிரதமருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்!




இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் முகஸ்டாலின் 15.10.2021 பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், " தமிழ்நாடு முதலமைச்சர் முக. ஸ்டாலின், இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள, தமிழ்நாட்டைச் சேர்ந்த 23 மீனவர்களை உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த 11.1.2021 அன்று நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 23 மீனவர்கள் 13.10.2021 அன்று, பாரம்பரிய மீன்பிடித் தளமாக உள்ள பருத்தித்துறை அருகே இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு, காரை நகர் கடற்படைத் தளத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இலங்கைக் கடற்படையினரின் இந்த நடவடிக்கை மிகவும் கண்டிக்கத்தக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.இந்தியா, இலங்கை மீனவர்களுக்கிடையேயான இந்த நீண்டகாலப் பிரச்சனையில் உடனடியாக இந்திய பிரதமர் தலையிட்டு, இப்பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்த்திட, உறுதியான வழிமுறைகளைக் காண வேண்டுமென்றும், தமிழ்நாடு முதலமைச்சர் தனது கடிதத்தின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார். இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 23 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட, இலங்கை அதிகாரிகளிடம் உறுதியாக, தீர்க்கமான முறையில் இந்தப் பிரச்சனையை எடுத்துச் சென்றிட இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கு வலியுறுத்துமாறு இந்திய பிரதமரை தனது கடிதத்தில் முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், இலங்கைக் கடற்படையினரால் அப்பாவி மீனவர்கள் தொடர்ந்து இதுபோன்று தாக்கப்படுவது ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், இந்திய பிரதமர், உரிய வழிமுறைகளைக் கையாண்டு, இதற்கு நிரந்தரத் தீர்வினைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார். " இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சசிகலா நடிப்புக்கு ஆஸ்கர் தரலாம்-முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் விமர்சனம்



சென்னை மெரினா கடற்கரையில் உள்ள முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அவரது தோழி சசிகலா 16.10.2021 மரியாதை செலுத்தினார். இந்நிலையில் சசிகலா மூன்று வருடங்களுக்குப் பிறகு ஜெ. நினைவிடத்தில் மரியாதை செலுத்தியுள்ள நிலையில், யானை பலம்கொண்ட அதிமுகவை கொசு தாங்கியிருப்பதாகக் கூறுவது நகைச்சுவையாக இருப்பதாகவும், சசிகலா நடிப்புக்கு ஆஸ்கர் தரலாம் எனவும் முன்னாள் அதிமுக அமைச்சர் ஜெயக்குமார் விமர்சித்துள்ளார். அதேபோல் அதிமுகவில் சசிகலாவுக்கு இடமில்லை. அமமுகவில் அவருக்கு இடம் கொடுத்தால் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார் ஜெயக்குமார்.

## மூன்று வருடங்களுக்கு பிறகு

# ஜெ.நினைவிடத்தில் சசிகலா



சென்னை மெரினா கடற்கரையில் உள்ள முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அவரது தோழி சசிகலா 16.10.2021 மரியாதை செலுத்தினார். சென்னை தி. நகரில் உள்ள இல்லத்திலிருந்து இன்று காலை 10.30மணிக்குப் புறப்பட்ட நிலையில், அவருக்குத் தொண்டர்கள் வரவேற்பளித்தனர். மெரினாவில் உள்ள ஜெ. நினைவிடம் சென்ற சசிகலா அங்கு அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தியபோது அவரது கண்கள் கலங்கின.ஏற்கனவே கடந்த 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சொத்துக்குவிப்பு வழக்கில் சிறை செல்வதற்கு முன்பு ஜெயலலிதா நினைவிடத்தில் சசிகலா மரியாதை செய்ததோடு நினைவிடத்தை மூன்றுமுறை அடித்து சத்தியமும் செய்திருந்தார். அரசியலைவிட்டு விலகப்போவதாக அறிவித்திருந்த சசிகலா, அண்மைக்காலமாக அதிமுகவை மீட்கப்போவதாக அவரது தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் ஃபோனில் பேசும் ஆடியோக்கள் தொடர்ச்சியாக வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கனமழையால் சபரிமலை செல்வதற்குப் பக்தர்களுக்குத் தடை!



கேரளாவில் தொடர் மழை காரணமாக, வரும் அக்டோபர் 19 ஆம் தேதி வரை சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு பக்தர்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கேரள மாநிலத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், கோட்டயம் , பத்தனம்திட்டா, இடுக்கி உள்ளிட்ட மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது . ஆங்காங்கே மண் சரிவும் ஏற்பட்டிருப்பதால், பிற பகுதிகளில் இருந்து சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் வகையில் பத்தனம்திட்டா மாவட்டத்தில் அமைந்துள்ள சபரிமலை கோவிலுக்கு பக்தர்கள் செல்ல வரும் அக்டோபர் 19 ஆம் தேதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐப்பசி மாத பூஜைக்காக கோயில் நடைத் திறக்கப்பட்ட நிலையில், பக்தர்களின் பாதுகாப்பிற்காகக் கேரள அரசு, இத்தகைய முடிவை எடுத்துள்ளது. அதேபோல், வரும் அக்டோபர் 18 ஆம் தேதி அன்று பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட முடிவு செய்யப்பட்டிருந்த நிலையில், தற்போது அக்டோபர் 20— ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969






அகர முதல
Aagaramuthalaa
மின்னிதழ்
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், அக்டோபர் 19,2021 | மயிலாடுதுறை | மலர்:10 இதழ்:14

# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறையில் தொடர் மழை 10 ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி சேதம்

## கொரோனா தடுப்பூசி செலுத்தி கொண்டால் மட்டுமே மது-மயிலாடுதுறை ஆட்சியர்



நாடு முழுவதும் கொரோனோ வைரஸ் தொற்று பரவி மக்களுக்கு பல்வேறு இன்னல்களை கொடுத்து வருகிறது. வைரஸ் தொற்றை கட்டுபடுத்த பல்வேறு நாடுகளும் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு தொற்று பரவுவதை குறைத்து வருகிறது. மேலும் கொரோனோ பரவுவதை தடுக்க தடுப்பூசி ஒன்றே தீர்வு என சுகாதார அமைப்புகள் கூறுகின்றன. அதன் காரணமாக கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்த அனைத்து நாடுகளும் தீவிரம் காட்டி வருகிறது. கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டால் மட்டுமே பல நாடுகளுக்கு வர அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் பல இடங்களில் தடுப்பு ஊசியை கட்டாயம் என்ற சூழல் நிலவுகிறது.

இந்நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் இதுவரை 23107 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு, 22 ஆயிரத்து 566 பேர் குணமாகி வீடு திரும்பியுள்ளனர். மேலும் மயிலாடுதுறை, சீர்காழி உள்ளிட்ட அரசு மருத்துவமனைகள், கொரோனா சிகிச்சை மையங்கள் என பல்வேறு இடங்களில் 229 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 312 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்று பரவ கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு வகையான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் தற்போது பல்வேறு மாவட்டங்களை தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்டத்திலும் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்ட மதுப்பிரியர்களுக்கு மட்டுமே மதுபானம் விற்பனை செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா அறிவித்துள்ளார். இதுகுறித்து, வெளியிட்ட செய்திக்குறிப்பில் அவர் கூறியதாவது: ஆரோக்கியமான தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் தற்போது நம்மை தாக்கிக் கொண்டிருக்கும் கோவிட்—19 பெருந்தொற்றை முற்றிலுமாக ஒழிக்கும் முயற்சியாகவும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும் அரசு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்களை அமைத்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்துக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கும் விதமாக மயிலாடுதுறை மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் மதுபான பிரியர்களாகிய நுகர்வோர்கள் மதுபானங்களை தமிழ்நாடு அரசு கட்டுப்பாட்டில் செயல்படும் டாஸ்மாக் கடைகளில் வாங்கும்போது, கோவிட் தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றினை டாஸ்மாக் கடையின் பணியாளர்கள் பதிவு செய்யும் வகையில் அசல் சான்றினையோ அல்லது கைபேசியில் வரப்பெற்ற குறுஞ்செய்தியையோ காண்பித்தால் மட்டுமே மதுபானங்களை நுகர்வோர் பெற்றுக்கொள்ளலாம். இந்த செயற்கரிய செயலுக்கு வாடிக்கையாளர்களாகிய உங்களது முழு ஒத்துழைப்பை அளித்து ஆரோக்கியமான கோவிட் தொற்றில்லா மாவட்டமாக உருவாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அச்செய்திக்குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு இதுநாள் வரை கொரோனா தடுப்பூசி செலுத்தாத மதுபான பிரியர்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டால் சில தினங்களுக்கு மது பானம் அருந்த கூடாது என்பதால் தடுப்பூசியை தவித்து வந்த மது பிரியர்கள் தற்போது வேறு வழியின்றி செய்வதறியாது தவித்து வருகின்றனர்.

### கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி சிறப்பு விற்பனையை

## மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தொடங்கி வைத்தார்.



தமிழக அரசின் தலைமை கூட்டுறவு நிறுவனமான கோ—ஆப்டெக்ஸ் கடந்த 86 ஆண்டுகளாக தமிழக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பாரம்பரியமான துணி இரகங்களை இந்திய முழுவதும் உள்ள கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக அனைவரும் பயன்பெறும் வகையில் விற்பனை செய்து நெசவாளர்கள் வாழ்வாதாரம் உயர முக்கிய பங்களிப்பு அளித்து வருகிறது. கோ—ஆப்டெக்ஸ் நிறுவனமானது காலத்திற்கேற்ற வகையில் புதிய உத்திகளை கையாண்டு பல புதிய வடிவமைப்புகளில் கோ—ஆப்டெக்ஸ் சேலைகள் மற்றும் இதர இரகங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு , நுகர்வோர்க்கும், உற்பத்தியாளர்க்கும் ஓர் தொடர்பை உருவாக்குகிறது. வாடிக்கையாளர் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையின் போது தமிழக அரசு வழங்கும் 30 சதவீத தள்ளுபடி விற்பனை திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த சிறப்பு விற்பனைக்காக புதிய வடிவமைப்புடன் கூடிய மென்பட்டு புடவைகள், காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் போன்ற ஊர்களில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப்புடவைகள், கோவை கோரா காட்டன் சேலைகள். கூறைநாடு புடவைகள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நெசவாளர்களின் கைவண்ணத்தில் உருவான பருத்தி சேலைகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், வேட்டிகள், லுங்கி, துண்டு இரகங்கள் , பருத்தி சட்டைகள், திரைச்சீலைகள், கால்மிதியடிகள், நைட்டிஸ், மாப்பிள்ளை செட் மற்றும் ஏற்றுமதி இரகங்கள் ஏராளமாகத் தருவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிறுவனத்தில் தீபாவளி 2021 சிறப்பு விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி மயிலாடுதுறை கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு ரூ125 லட்சமும், சீர்காழி கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு ரூ.60 லட்சமும் ஆக மொத்தம் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு ரூ.185 லட்சம் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது . மேலும் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்படுத்தி வரும் கனவு நனவு திட்டத்தின்படி வாடிக்கையாளர்கள் மாதந்தோறும் ரூ.300 முதல் ரூ.5000 வரை 10 மாத தவணைகள் மட்டும் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்டு 11 மற்றும் 12 வது மாத தவணைகளை கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் செலுத்துவதுடன் கூடுதல் சேமிப்புடன் பருத்தி மற்றும் பட்டு இரக துணிகளை வாங்கி பயன்பெறலாம். எனவே பொதுமக்கள் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு உறுதுணையாக திகழ்ந்து, நெசவாளர்களின் தொழில் வளர பக்கபலமாக இருக்க வேண்டும் இரா. லலிதா தெரிவித்தார் என மாவட்ட ஆட்சியர் இந்நிகழ்ச்சியில் கோ—ஆப்டெக்ஸ் முதுநிலை மண்டல மேலாளர் செள. சாதிக் அலி, கோ—ஆப்டெக்ஸ் மண்டல இயக்குநர் லெனின், வர்த்தக மேலாளர் (துணிக்கைல்) உகந்தசாமி. விற்பனை நிலைய மேலாளர் எஸ். முருகன் மற்றும் விற்பனை நிலைய ஊழியர்களும் பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறையில் விஷம் கலந்த அரிசியை சாப்பிட்ட 15 ஆடுகள் உயிரிழப்பு...



மயிலாடுதுறை அருகே பெரம்பூர் போலீஸ் சரகத்துக்கு உட்பட்ட அரிவேளூர் கிராமம் மாரியம்மன்கோவில் பின்புறம் உள்ள திடலில் மேய்ந்துகொண்டிருந்த 5 ஆடுகள் திடீரென உயிரிழந்தன. இந்தநிலையில் திடலில் மேய்ந்து கொண்டிருந்த மீனா என்பவருக்கு சொந்தமான 4 ஆடுகள், பன்னீர்செல்வம் என்பவரின் 3 ஆடுகள், மீராவின் 2 ஆடுகள் உள்பட 15 ஆடுகள் உயிரிழந்தன . இதனால் அதிர்ச்சியடைந்த ஆட்டின் உரிமையாளர்கள் திடலுக்கு சென்று பார்த்தனர். அப்போது மர்மநபர்கள் அரிசியில் குருணை மருந்தை கலந்து பாத்திரத்தில் வைத்திருப்பது தெரியவந்தது. இது குறித்து பெரம்பூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று அரிசியில் குருணை மருந்தை கலந்து வைத்த மர்ம நபர் குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



### குத்தாலத்தில் 13 வயது சிறுமி கொல்லப்பட்ட வழக்கு

# 25 வயது இளைஞர் கைது



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் பகுதியில் வசிக்கும் 9 ஆம் வகுப்பு பயிலும் 13 வயது மாணவி கடந்த 7 ஆம் தேதி இரவு 9 மணி அளவில் அதே பகுதியில் வசிக்கும் அவரது மாமா வீட்டிற்கு சென்று விட்டு வருவதாக சென்றவர் அதன் பிறகு மீண்டும் வீடு திரும்பவில்லை. இதனால் பல்வேறு பகுதியில் தேடிய சிறுமியின் உறவினர்கள் அன்றிரவே குத்தாலம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். தொடர்ந்து அப்பகுதியில் தேடிய உறவினர்கள், சிறுமியின் மாமா வீட்டின் பின்புறம் உள்ள வாய்க்காலில் சிறுமி மர்மமான முறையில் இறந்து கிடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். சிறுமி அணிந்திருந்த லெக்கின்ஸ் பேண்ட் கிழிந்து ரத்தக்கரை இருந்தது. மயிலாடுதுறை டிஎஸ்பி வசந்தராஜ் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்தினார். இதை அடுத்து சிறுமியின் உடலை போலீசார் கைப்பற்றி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து பிரேத பரிசோதனை செய்து உறவினர்களிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து, பாலியல் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டு சிறுமி கொலை செய்யப்பட்டாரா? என்ற கோணத்தில் விசாரணையை தொடங்கிய குத்தாலம் காவல் ஆய்வாளர் வள்ளி தலைமையிலான தனிப்படை போலீசார், வில்லியநல்லூர் கிராமத்தில் தீவிர விசாரணை மேற்கொண்டனர். சிறுமியின் உடலை வாய்க்காலில் இருந்து உறவினர்கள் வீட்டிற்கு தூக்கி வந்துவிட்டதால் வாய்க்காலில் தடயம் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் சிறுமியின் உறவினர்கள் அளித்த தகவலின் பேரிலேயே போலீசார் தொடர் விசாரணை செய்து வந்தனர். இந்நிலையில், அப்பகுதியினர் சிலரை போலீசார் கண்காணிப்பு வளைத்தில் கொண்டுவந்து அவர்களை ரகசியமாக கண்காணித்து வந்தனர். இதனிடையே மருத்துவ பரிசோதனை அறிக்கையின்படி சிறுமியின் சந்தேக மரணம் வழக்கு கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டது. இந்த தகவல் அறிந்த அதே தெருவைச் சேர்ந்த பிரபாகர் என்ற 25 வயதான இளைஞர் அங்கிருந்து நழுவி பேருந்தில் ஏறி தப்பிக்க முயன்றபோது போலீசார் அவரை பிடித்து காவல் நிலையத்துக்கு கொண்டு சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில் அச்சிறுமியின் உறவினரான பிரபாகர் கடந்த 3 மாதங்களாக அச்சிறுமியை காதலித்து வந்ததும், அச்சிறுமியுடன் பலமுறை உடலுறவு கொண்டுள்ளதும் தெரியவந்தது. சம்பவத்தன்று சிறுமியை தனியாக வரச்சொன்ன பிரபாகர் சிறுமியுடன் உடலுறவு கொண்டுள்ளார். பின்னர், அப்பகுதி இளைஞர்களுடன் சிறுமி சகஜமாக பேசுவதை கண்டித்துள்ளார். அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் தனது வேட்டியால் சிறுமியின் கழுத்தை நெறித்து சிறுமியை வாய்க்காலில் தூக்கிப்போட்டுள்ளார். இதில், சிறுமி மூச்சு திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். பின்னர் அங்கிருந்து வெளியேறிய பிரபாகர், உறவினர்களுடன் சேர்ந்து தானும் சிறுமியை தேடுவது போல் நடித்துள்ளார். பிரபாகரின் வாக்குமூலத்தைத் தொடர்ந்து, போலீசார் அவரை கைது செய்து நாகப்பட்டினம் மகிளா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பின்னர் சிறையில் அடைத்தனர். இதன்மூலமாக கடந்த ஒரு வாரமாக நீடித்துவந்த சிறுமியின் மரணத்தில் நிலவிய மர்மத்துக்கு விடை கிடைத்துள்ளது.

### மயிலாடுதுறையில் தொடர் மழை 10 ஆயிரம் ஏக்கர் நடவு

# செய்யப்பட்ட சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி சேதம்



மயிலாடுதுறை மாவட்டத்தில் பிரதான தொழிலாக விவசாயம் இருந்து வருகிறது. மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் இந்தாண்டு என்பது ஆயிரம் ஹெக்டேர் குறுவை சாகுபடி செய்யப்பட்ட நிலையில், தற்போது சம்பா சாகுபடி பணிகள் தீவிரமாக மாவட்டம் முழுவதும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சூழலில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, அதனை தொடர்ந்து புதிய காற்றழுத்த தாழ்வு நிலை போன்ற காரணங்களால் கடந்த ஒரு வார காலமாக அவ்வப்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் கன மழை பெய்து வருகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில் பிரதான தொழிலாக விவசாயம் இருந்து வருகிறது. மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இந்நிலையில் இந்தாண்டு என்பது ஆயிரம் ஹெக்டேர் குறுவை சாகுபடி செய்யப்பட்ட நிலையில், தற்போது சம்பா சாகுபடி பணிகள் தீவிரமாக மாவட்டம் முழுவதும் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சூழலில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, அதனை தொடர்ந்து புதிய காற்றழுத்த தாழ்வு நிலை போன்ற காரணங்களால் கடந்த ஒரு வார காலமாக அவ்வப்போது மயிலாடுதுறை மாவட்டத்தில் கன மழை பெய்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக பெருமழை காலங்களில் கடும் பாதிப்புக்கு உள்ளாகிவரும் இப்பகுதி விவசாயிகள் சிலர் இந்த ஆண்டு ஒன்றிணைந்து தாங்களே 1 லட்சம் ரூபாய் வரை செலவு செய்து தங்கள்பகுதியில் எல்லை வாய்க்காலை தூர்வாரி உள்ளனர். இருப்பினும், பல்வேறு கிராமங்களில் வழியே செல்லும் வாய்க்கால் முழுவதும் தூர்வாரப்படாத நிலையில், அண்மையில் பெய்த கனமழையால் தண்ணீர் தேங்கி பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் உடனடியாக எல்லை வாய்க்காலை தூர்வாரி அழுக தொடங்கியுள்ள தங்கள் பயிர்களை காப்பாற்றி தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் இன்னும் ஓரிரு நாட்கள் தாமதித்தால்கூட தங்கள் பயிர்களை சிறிதளவுகூட காப்பாற்ற முடியாமல் போய்விடும் என்றும், அரசு இதனை கவனத்தில் கொண்டு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சீர்காழி: நவீன கருவியை பயன்படுத்தி நெல் விதைப்பில் ஈடுபட்ட பொறியியல் பட்டதாரி சகோதரர்கள்



சீர்காழி அருகே ஆயுத பூஜையை முன்னிட்டு நவீன நெல் விதைப்பு கருவி மூலம் பொறியியல் பட்டதாரி சகோதரர்கள் சம்பா சாகுபடி பணியை துவங்கினர். மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே குன்னம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சந்திரபிரகாஷ், ஜெகதீஷ், சுபரீஷ், பொறியியல் பட்டம் பெற்றுள்ள இவர்கள் இருவரும் தங்களுக்குச் சொந்தமான 12 ஏக்கர் நிலத்தில் நவீன விவசாய கருவிகள் உதவியுடன் சம்பா சாகுபடி பணியை தொடங்கினர். நேரடி நெல் விதைப்பில் சம்பா சாகுபடியை துவங்கிய நிலையில் விதைப்புக்காக (டிரம் சீடர்) உருளை விதைப்பான் என்ற நவீன கருவியை பயன்படுத்தியுள்ளனர். இதனால் 1 ஏக்கர் விதைப்புக்கு 7 கிலோ விதைநெல் மட்டுமே பயன்படுத்தபட்டுள்ளது. சாதாரணமாக கையால் தெளிக்கும் போது ஏக்கருக்கு 25 முதல் 30 கிலோ வரை விதை நெல் தேவைபடும், இந்நிலையில் (டிரம் சீடர்) உருளை விதைப்பான் மூலம் விதைக்கும் போது சீரான இடைவெளியில் நடவு செய்யப்பட்டது போலவே விதைகள் தொளிக்கபடுவதால் களைகள் இல்லாமல், ஆட்கள் தேவை குறைந்து கூடுதல் மகசூல் கிடைக்கும் எனவும் பொறியியல் சகோதரர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். அதே நேரம் நவீன கருவிகளை விவசாயிளுக்கு அரசு மானிய விலையில் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மயிலாடுதுறை: விவசாய சங்கத்தினர் – போலீசார்இடையே தள்ளு முள்ளு



உத்தரப்பிரதேச மாநிலத்தில் போராடிய விவசாயிகள் மீது காரை ஏற்றி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு காரணமான மத்திய மந்திரியை பதவி நீக்கம் செய்யாததை கண்டித்தும், மத்திய அரசு கொண்டு வந்துள்ள 3 வேளாண் சட்டங்களை திரும்பப் பெற கோரியும் வலியுறுத்தி ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் பிரதமர் நரேந்திர மோடி உருவபொம்மை எரிப்பு போராட்டம் மயிலாடுதுறை பஸ் நிலையம் அருகே கிட்டப்பா அங்காடி முன்பு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. இதனால் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு தங்கவேல், துணை போலீஸ் சூப்பிரண்டு வசந்தராஜ் ஆகியோர் தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர். மாலை 5 மணி அளவில் காமராஜர் சாலையில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தில் இருந்து தமிழ்நாடு விவசாய சங்கம் மாவட்ட செயலாளர் துரைராஜ் தலைமையில் விவசாய சங்கத்தினர் ஊர்வலமாக புறப்பட்டு வந்தனர். அவர்களை கச்சேரி சாலையில் தடுத்து நிறுத்திய போலீசார் அவர்களிடம் பிரதமர் நரேந்திரமோடி உருவபொம்மை உள்ளதா? என சோதனையிட்டனர். அப்போது அவர்களிடம் பிரதமர் உருவபொம்மை இல்லாததால் ஊர்வலமாக செல்ல போலீசார் அனுமதித்தனர். போராட்டக்காரர்கள் கச்சேரி சாலை வழியாக பஸ் நிலையம் அருகே வந்தடைந்தனர். அப்போது போராட்டக்காரர்கள் மத்திய அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். அந்த நேரத்தில் கச்சேரி சாலை வழியாக வந்த ஆட்டோ ஒன்றில் பிரதமர் நரேந்திரமோடி உருவபொம்மை இருப்பதை அறிந்த போலீசார் அதனை சுற்றி வளைத்தனர். அப்போது விவசாயிகளுக்கும், போலீசாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது அந்த உருவபொம்மையை போலீசார் கைப்பற்றி போலீஸ் வாகனத்தில் பாதுகாப்பாக வைத்தனர். இதற்கிடையில் போராட்டம் நடத்தியவர்களை போலீசார் சுற்றிவளைத்து கைது செய்வதாக கூறி பஸ்சில் ஏற வலியுறுத்தினர். ஆனால் சில பெண்கள் உள்பட போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு பகுதியினர் மட்டும் பஸ்சிலும், போலீஸ் வாகனத்திலும் ஏறினர். ஆனால் போராட்டத்தில் ஈடுபட்ட மற்றொரு பிரிவினர் பஸ்சை அந்த இடத்தைவிட்டு இயக்க விடாமல் சுற்றிவளைத்து போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். இதனால் போலீசாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் மீண்டும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது போராட்டக்காரர்கள் மோடியின் உருவப்படத்தை எடுத்து எரிக்க முயற்சித்தனர். அதனையும் போலீசார் பறித்துச் சென்றனர். அதன் பிறகு அனைவரையும் கைது செய்த போலீசார் தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். இந்த போராட்டத்தில் கலந்து கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் சீனிவாசன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் ஸ்டாலின், இயற்கை விவசாயி ராமலிங்கம் மற்றும் 4 பெண்கள் உட்பட 21 பேர் கைது செய்யப்பட்டனர். மயிலாடுதுறை பஸ் நிலையம் அருகே நடந்த இந்த போராட்டத்தால் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதேபோல போராட்டம் நடத்த முயன்ற இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் இடும்பையன் தலைமையில் வந்த அக்கட்சியினர் 21 பேரை போலீசார் கைது செய்தனர். இதற்கிடையில் பிரதமர் மோடி உருவபொம்மை எரிப்பு போராட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பா. ஜ. க. நிர்வாகிகள் அகோரம், மோடிகண்ணன் உட்பட சிலர் கண்ணாரத் தெரு முக்கூட்டில் கூடினர். அவர்களை போலீசார் அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதனால் நேற்று மயிலாடுதுறை நகரின் முக்கிய பகுதிகள் முழுவதும் பரபரப்பாக காணப்பட்டது.

விளம்பர தொடர்புக்கு

9597887847

8870884969